# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 092 | புதன்கிழமை Wednesday | 01.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும்




## ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுடன் 2வது நாள் ஆலோசனை கூட்டத்தில் முதலமைச்சர் விஜய் பேச்சு

தமிழகத்தில் ஒவ்வொரு அரசும் ஆண்டுதோறும்மாவட்டகலெக்டர்கள், போலீஸ் அதிகாரிகள் மாநாட்டை நடத்துவது வழக்கம்.

இந்த மாநாட்டில்தான் சட்டம்-ஒழுங்கு, அரசின் திட்டங்கள் போன்றவை பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படும்.

அந்தவகையில் முதல்-அமைச்சர் விஜய் தலைமையில் தலைமைச் செயலகத்தில், அனைத்து மாவட்ட கலெக்டர்கள் மற்றும் போலீஸ் அதிகாரிகளின் 2 நாள் மாநாடு நேற்று தொடங்கியது. நேற்றைய கூட்டத்தில் 2 அமர்வுகள் நடத்தப்பட்டன. முதல் அமர்வில் கலெக்டர்களும், போலீஸ் அதிகாரிகளும் இணைந்து பங்கேற்றனர். 2-ம் அமர்வில், அரசுத் துறைகளின் செயலாளர்கள், மாவட்ட கலெக்டர்கள் பங்கேற்றனர்

மாநாட்டை முதல்-அமைச்சர் விஜய் தொடங்கிவைத்து பேசுகையில், வெளிப்படையான, நேர்மையான, லஞ்சலாவண்யமற்ற ஒரு சமூக நீதிக்கான அரசாக இந்த அரசை மக்கள் தேர்ந்தெடுத்து உள்ளார்கள். ரேஷன், கல்வி, குடிநீர், சுகாதாரம், மின் சாரம், சாலை வசதி, பஸ் வசதி போன்றஅடிப்படைவசதிகளில் முக்கிய கவனம் செலுத்தியாக வேண்டும்.


சட்டம் ஒழுங்கு பிரச்சினையை பொறுத்தவரை, சட்டத்தின் அடிப்படையில் சுதந்திரமாக முடிவுசெய்யலாம். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு உயர்வானவர்களாக இருந்தாலும், பாரபட்சமின்றி சட்டப்படி உடனடியாக துரிதமாக நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டும். அதில் நிரபராதிகள் யாரும் தப்பித்தவறிகூட பாதிக்கப்பட்டுவிடக்கூடாது.

முக்கியமாக பெண்கள் பாதுகாப்பை நூறு சதவீதம் உறுதிப்படுத்த வேண்டும். அதில் மாற்றம் இல்லாமலும், சமரசம் இல்லாமலும் செயல்பட வேண்டும். பெண்களின் பாதுகாப்புக்கு உரிய சிறப்பு ஏற்பாடுகளை செய்தே ஆக வேண்டும். அதன் படி, மாவட்ட கலெக்டர்களும் போலீஸ் சூப்பிரண்டுகளும் இதில் கூர்மையான மற்றும் சிறப்பு கவனத்தை செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

2-வது நாளாக மாநாடு

இந்தநிலையில், இன்று காலை 9.30 மணியளவில் 2-வது நாளாக மாநாடு தொடங்கி நடைபெற்று வருகிறது. சென்னை தலைமைச்செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் முதல்-அமைச்சர் விஜய் தலைமையில் நடைபெற்று வரும் இந்த மாநாட்டில் மாவட்ட கலெக்டர்கள், வனத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்றுள்ளனர். மாலை 6 மணி வரை இக்கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்தின் நிறைவில் முதல்-அமைச்சர் விஜய் உரையாற்றுவார். அப்போது திறமையாக செயல்பட்ட கலெக்டர், போலீஸ் அதிகாரிகளை பாராட்டி பரிசுகளை வழங்குவார்.

# "எடப்பாடி பழனிசாமியின் சந்தர்ப்பவாத நிலைப்பாட்டுக்கு பலியாக தயாராக இல்லை" எம்.ஆர்.விஜயபாஸ்கர் விளக்கம்



கரூர்:"அதிமுகபொதுச் செயலாளர் பழனிசாமியின் சந்தர்ப்பவாத நிலைப்பாட்டுக்கு பலியாக தயாராக இல்லை. இந்த இயக்கத்திலிருந்து மீளா கண்ணீருடனும், மிகுந்த மன வேதனையுடனும் விடைபெறு கிறேன்" என எம்.ஆர்.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

கரூர் தொகுதி எம்எல்ஏ பதவியை முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் நேற்று ராஜினாமாசெய்தார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை மற்றும் எக்ஸ் வலைத்தளப் பதிவில், "எம்ஜிஆரின் லட்சியப் பாதையிலும், ஜெயலலிதாவின் பேரன்பிலும் என் அரசியல் பயணத்தை தொடங்கியவன் நான். பதவிக்காகவோ, சுயநலத்திற்காகவோ இந்த இயக்கத்திற்கு வந்தவன் அல்ல. ரத்தமும், சதையுமாய் இந்த இயக்கத்தை என் மூச்சாக கருதி வாழ்ந்தவன்.

ஜெயலலிதா மறைவுக்குபிறகு இயக்கம் சந்தித்த சோதனைகள் அத்தனையும் நீங்கள் அறிவீர்கள். அத்தனை நெருக்கடி நேரங்களிலும் பொதுச்செயலாளர் பழனிசாமி பின்னால் உறுதியாக நின்றவன் இந்த விஜயபாஸ்கர்.

கடந்த 5 ஆண்டு கால திமுக ஆட்சியில் அப்பட்டமான, அதிகார, அடக்குமுறை காரணமாக என் மீது 43 பொய் வழக்குகள் சுமத்தப்பட்டன. கட்சியினர், குடும்பத்தினர் மீது 100-க்கும் மேற்பட்ட வழக்குகள் பாய்ந்தன.

செந்தில்பாலாஜியின் அதிகார மமதையை வீழ்த்தி, அதிகார பலத்தோடும், பண பலத்தோடும் விளங்கிய செந்தில்பாலாஜியை எதிர்த்து பல்வேறு சட்டப் போராட்டம் நடத்தி எத்தனையோ துரோகங்களை தாங்கி மீண்டும் அதிமுக கொடியை ஏற்றியவன் நானும், என்னுடன் துணை நின்ற கட்சி தொண்டர்களும். ஆனால், இத்தனை தியாகங்களுக்கும், நான் சுமந்த வேதனைகளுக்கும் இன்று எனக்கு பரிசாக கிடைத்திருப்பது நெஞ்சில் பாய்ந்த துரோக ஈட்டி மட்டுமே.

இத்தனை ஆண்டுகள் நாம் யாரை எதிர்த்து யாருடைய மக்கள் விரோத, அராஜக ஆட்சியை வீழ்த்த இத்தனை வழக்குகளையும், ரணங்களையும் நம் உடம்பில் ஏந்தினோமோ இன்று அதே தீய சக்திளுடன் கைகோத்து, அவர்கள் தயவோடு ஆட்சிக் கட்டிலில் அமர தலைமை முற்பட்டதைக் கண்டு என் மனம் ரத்தக் கண்ணீர் வடிக்கிறது. எம்ஜிஆர், ஜெயலலிதாவின் அரசியல் வாரிசுகள் நாம். நமக்கு போய் இப்படியொரு எண்ணம் வரலாமா? தீய சக்தி திமுகவுடன் அதிமுக எப்படி கைகோக்க முடியும்?

நீங்கள் முன்மொழிந்த அந்தச் சமரச முடிவுக்குத்தான் எங்களைப் போன்ற நிர்வாகிகளும் தொண்டர்களும் எதிராக நின்றோமே தவிர, உங்களின் தலைமைக்கு ஒருபோதும் நாங்கள் எதிராக நின்றதில்லை. உங்களைத்தான் இந்த இயக்கத்தின் நிரந்தரப் பொதுச்செயலாளராக நாங்களெல்லாம் உயிரைக் கொடுத்து முன்னிறுத்தினோம். ஆனால், எங்களின் அத்தனை எதிர்ப்புகளையும், தொண்டர்களின் தார்மிக உணர்வுகளையும் துச்சமாகக் மதித்து, நீங்கள் எடுத்த அந்தத் தன்னிச்சையான முடிவுதான் இன்று ஒட்டுமொத்த இயக்கத்தையும் அழிவிலும் வேதனையிலும் நிறுத்தியுள்ளது. உங்களின் இந்த சந்தர்ப்பவாத நிலைப்பாட்டுக்கு பலியாக, எத்தனையோ ரணங்களைச் சுமந்த இந்த விஜயபாஸ்கரும் என்னுடன் பயணித்த கழக தோழர்களும் தயாராக இல்லை.

தொண்டர்களே, இந்த இயக்கத்திற்காக என் உழைப்பையும், என் வாழ்நாளின் பெரும்பகுதியையும் கொடுத்து விட்டேன். இன்று இந்த இயக்கத்திலிருந்து மீளா கண்ணீருடனும், மிகுந்த மன வேதனையுடனும் விடைபெறுகிறேன். என் உயிரினும் மேலான கரூர தொகுதி பொது மக்களே உங்களின் சேவகனாக என் மக்கள் பயணம் என்றும் தொடரும்" என தெரிவித்துள்ளார்.

# நடிகர் ராகவா லாரன்ஸ் திருச்சி கிழக்கில் போட்டியா? வீடியோ வெளியிட்டு விளக்கம்

சென்னை: "எனது அரசியல் முடிவை மக்களின் விருப்பப்படியே எடுப்பேன். இப்போதைக்கு மக்கள் சேவையே எனது முதல் இலக்கு" என்று கூறி, திருச்சி கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுவார் என்று வெளியான தகவலுக்கு நடிகர் ராகவா லாரன்ஸ் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

அண்மையில் செய்தியாளர்கள் சந்திப்பில் தான் பேசியது கடுமையான சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், அது குறித்து விளக்கம் அளிக்கும் வகையில் நடிகர் ராகவா லாரன்ஸ் இன்று (ஜூன் 30, 2026) தனது அதிகாரப்பூர்வ சமூக வலைதள பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், "திருச்சி கிழக்கு இடைத்தேர்தல் மற்றும் நான் சமீபத்தில் செய்தியாளர் சந்திப்பில் பேசியது சர்ச்சையானது குறித்தும் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். செய்தியாளர் சந்திப்பில் பேசிய பின், நான் மக்களை பற்றி தவறாக பேசியதாக கருத்து பரவியது. அப்போதே மக்களை பற்றி தவறாக பேசவில்லை என எனது சமூக வலைதளத்தில் விளக்கம் அளித்தேன். படப்பிடிப்பில் இருந்த போது, எனது நண்பர்கள் என்னை தொடர்பு கொண்டு இந்த விவகாரம்குறித்துவிளக்கம் அளித்து வீடியோ பதிவிட வேண்டும் என வற்புறுத்தினர். மேலும் அறக்கட்டளையில் இருந்து குழந்தைகளும் அவ்வாறே கூறினர். பின்னர் வீட்டிற்கு சென்ற போது, எனது தாயார், "இதற்காக தான் அரசியல் வேண்டாம் என கூறினேன்" என கோபமாக கூறினார்.

அப்போது தான் இந்த விவகாரத்தின் தீவிரம் எனக்கு புரிந்தது. அந்த நேரத்தில் எனது அறக்கட்டளையில் உள்ள ராஜகோபால் என்பவர் என்னிடம் இந்த விவகாரத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என கண்ணீர் மல்க வறுபுறுத்தினார். அவரை நான் சிறு வயது முதல் நான் வாங்கிய முதல் வீட்டில் வைத்தும் வளர்த்து வருகிறேன். என்னை நம்பி வந்த ராஜகோபாலை பார்த்து கொள்கிறேன் என்றால், என்னை வாழ வைத்த மக்களை பற்றி நான் தவறாகபேசுவேனா? என்னை பற்றி அவதூறு பரவிய போது, எனது தாயார், இதற்காக தான் அரசியல் வேண்டாம் என்றேன் என அழுது விட்டார்.



முன்பு நான் அரசியலுக்கு செல்கிறேன் என கூறிய போது சரி என தாயார்கூறினார். ஆனால் இந்த சர்ச்சைக்கு பிறகு வேண்டாம் என்றார். எனக்கு எனது தாயார் தான் தெய்வம். அனைத்துமே எனது வாழ்க்கையில் எனது தாய் தான். மக்கள் அறக்கட்டளையின் மூலமாக மட்டுமே நீங்கள் உதவி செய்தால் போதும் என கூறினார், எனக்குஅரசியல்தேவையில்லை" என்று அவர் அந்த வீடியோவில் பேசியுள்ளார். திருச்சி கிழக்கு இடைத்தேர்தல் குறித்து பேசுகையில், "திருச்சி கிழக்கு தொகுதியில் நான் போட்டியிட்டால் வாக்களிக்கிறேன் என பலர் கூறுகின்றனர். முதலமைச்சர் விஜய்யுடன் ஆரம்ப கட்டத்தில் இருந்தும், அவரது அரசியல் வாழ்க்கைக்காக சிலர் உழைத்திருப்பர். அவர்கள் போட்டியிட வேண்டுமா? அல்லது நான் போட்டிய வேண்டுமா? முதலமைச்சர் விஜய் யாரை முடிவு செய்து வேட்பாளராக நிற்க வைக்கிறாரோ அவர்கள் போட்டியிட வேண்டும். அவரது முகத்திற்கு தான் வாக்களிக்கின்றனர், ஆனால் நான் வேட்பாளராவது தர்மம் இல்லை.

ஒருவேளை நான் தவெகவில் சேர்ந்தால் உறுப்பினராக சேர்ந்து, உழைப்பேன், பின்னர் முதலமைச்சர் பார்த்து எனது உழைப்பிற்கு ஏற்ற பதவியை கொடுப்பார், அந்த பதவி மூலம் மேலும் சேவைசெய்வேன். கலைஞர் இருந்த போது அவரிடம் எனது குழந்தை களுக்காக உதவி கேட்டேன். பின்னர் உதயநிதி, அன்புமணி ஆகியோரிடம் உதவி கேட்ட போது, உதவி செய்தனர். அதே போன்று நடிகராக இருந்த போது விஜய்யிடம் கேட்ட போதும் அவரும் உதவி செய்துள்ளார்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# வானொலியில் 'இயற்கை இன்பம் – சுற்றுச்சூழல் சிந்தனைகள்' சிறப்புப் பேச்சுத் தொடர்




அகில இந்திய வானொலியின் மதுரை மற்றும் இராமேஸ்வரம் நிலையங்களில், இயற்கை இன்பம் - சுற்றுச்சூழல் சிந்தனைகள் என்ற தலைப்பில் சிறப்புப் பேச்சுத் தொடர் ஜூன் 1 முதல் 16ஆம் தேதி வரை தினமும் காலை 6.30 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கை வளங்களின் அவசியம் மற்றும் பசுமை வாழ்வியல் குறித்து உரையாற்றுகிறார்.

இந்த நிகழ்ச்சி மதுரை வானவில் 103.3 எப்.எம்., இராமேஸ்வரம் வானவில் 100.9 எப்.எம். மற்றும் மதுரை முதன்மை அலைவரிசை 1269 ஏ.எம். ஆகிய வானொலி அலைவரிசைகளில் ஒலிபரப்பாகிறது.


மேலும், இணைய வழியாகவும் நிகழ்ச்சியைக் கேட்கலாம். மதுரை வானவில் ஒலிபரப்பை https://radiosindia.com/maduraifm.html மற்றும் மதுரை முதன்மை அலைவரிசை ஒலிபரப்பை https://www.tamilradios.com/air-madurai-pc-am-1269 என்ற இணையதளங்கள் மூலம் கேட்கலாம்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மதுரை அகில இந்திய வானொலியின் நிகழ்ச்சி தலைவர் தாராதேவி தலைமையில், நிகழ்ச்சி பொறுப்பாளர் கார்த்திகைதீபன் மற்றும் பகுதி நேர அறிவிப்பாளர் விக்னேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.

இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் இந்தப் பயனுள்ள நிகழ்ச்சியை அனைவரும் கேட்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

# பெரியகுளம் அருகே உள்ள தாமரைகுளம் கிராமத்தில் ஸ்ரீ மங்களகர ஆஞ்சநேயர் சுவாமி கும்பாபிஷேகம்

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள தாமரைகுளம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மங்களகர ஆஞ்சநேயர் சுவாமி நாளைய உணருத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது இந்த கும்பாபிஷே நிகழ்ச்சி 19 6 2026ல் முகூர்த்தக்கால் நடுதல் கங்கணம் நிகழ்ச்சியுடன் தொடங்கி 28 6 20026 அன்று விக்னேஸ்வர பூஜை எஜமானர் அனுக்கை மகா சங்கல்பம் புண்யக வஸ்திர பகுதி மகா கணபதி சுதர்சன ஹோமம் மகாலட்சுமி கோமம் நவக்கிரக ஹோமம் மகா பூர்ணகுதி தீபாராதனை பிரசாதம் வழங்குதல் செய்யும் மாலை முதல் கால யாக பூஜை அறை பூஜைமங்கள இசைவிக்னேஸ்வர பூஜை தீர்த்தங்கரணம் வாஸ்து சாந்தி ஆஞ்சநேய மூல மந்திரி ஜெபகோமம் திரவிய யாகூபதி பூர்ணாகுதி மகா திவாரணி பிரசாதம் வழங்குதல் நிகழ்ச்சியும் பந்தர ஸ்தாபனம் ரத்தின நியாசம் அஞ்சன சங்கடம் சாத்துதல் நிகழ்ச்சி நடைபெற்றது விமான மகா கும்பாபிஷேகம் மூலஸ்தான மகா கும்பாபிஷேகம் மகா அபிஷேகம் அலங்காரதி பரதனை நடைபெற்றது மேலும் காலை 11 மணிக்கு மேல் அன்னதானம் வீழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது நிகழ்ச்சியில் அனைத்து பக்த கோடிகள் கலந்து கொண்டு என்னை நடத்திக் கொடுத்தனர் சர்வ சாதகத்தின் பெரியகுளம் பாம்பாற்று ராம பக்த ஆஞ்சநேயர் திருக்கோயில் பரம்பரை ஸ்தானிகர் எஸ் லட்சுமண்ன் ஐயர் அவர்கள் தலைமையில் தியாக பூஜை நடத்தி கொடுக்கப்பட்டது ஸ்ரீ மங்களகர ஆஞ்சநேயர் திருக்கோயில் பங்காளிகள் மற்றும் தாமரைக்குளம் ஊர் பொதுமக்கள் மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்



# கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் அணி 007 சார்பாக தீயணைப்பு, பேரிடர் பயிற்சி மற்றும் மீட்பு பணிகள் விழிப்புணர்வு கருத்தரங்கம்



கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் அணி -007 சார்பாக தீயணைப்பு, பேரிடர் பயிற்சி மற்றும் மீட்பு பணிகள் விழிப்புணர்வு கருத்தரங்கம் முதல்வர் திருமதி ரா. ஜெயா (மு. கூ. பொ ) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆங்கிலத்துறை தலைவர் முனைவர்.ம.ராம்சங்கர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக வணிகவியல் துறை பேராசிரியர் முனைவர் S.ராஜேஷ் கண்ணா அனைவரையும் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் கடையநல்லூர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை நிலைய அலுவலர் திரு ஷேக் அப்துல்லா மற்றும் நிலைய அலுவலர் (பயிற்சி) திருமதி நந்தினி ஆகியோர் தமது குழுவினருடன் வந்திருந்து மாணவ மாணவிகளுக்கு பேரிடர் கால மீட்பு பயிற்சிகள் விழிப்புணர்வு மற்றும்பல்வேறு வகையான இடர்பாடுகளை கையாளுவது எப்படி அவசர கால உதவி எண்கள் குறித்தும் மாணவர்களிடையே விழிப்புணர்வு பயிற்சி ஏற்படுத்தி கருத்துரையும் வழங்கினர். மேலும் கருத்துரை வழங்கியும் கள பயிற்சியும் வழங்கினார்கள் இதில் இயற்கை வாயு சீற்றம் கட்டுப்படுத்துவது எப்படி வெள்ள இடர்பாடுகளில் மீட்பது, தயார் நிலையில் இருப்பது எப்படி என்பது குறித்தும் வாயுக்களை திறந்து வணிக வளாகங்களில் இடர்பாடு காலங்களில் பயன்படுத்துவது எப்படி என்றும் விரிவாக விளக்கிக் கூறினர். நிகழ்ச்சியில் இறுதியாக நாட்டு நல பணி திட்ட அலுவலர் முனைவர் பால் மகேஷ் நன்றி உரை கூறினார். இதில் திரளான மாணவ மாணவிகள் பேராசிரியர்கள் உட்பட அனைவரும் கலந்து கொண்டு விழிப்புணர்வு பெற்றனர். பல்வேறு கள பயிற்சிகளை தீயணைப்பு வீரர்களான திரு.பால்ராஜ், ஜெயசீலன், சிந்தன், ரா.பால்ராஜ், வே நம்பிராஜன், கணேஷ் கண்ணன், சங்கர செல்வம், தங்கராஜ் ஆகியோர் கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு நிலைய அலுவலர் மற்றும் நிலைய பயிற்சி அலுவலருடன் இணைந்து சிறப்பாகசெய்தனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் பால் மகேஷ் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ மாணவிகளுடன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## தென்காசி புதிய பேருந்து நிலையத்தின் முன்பு

# த.வெ.க. அமைச்சரை கண்டித்து தென்காசி தெற்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




பொது வெளியில் போதைப்பொருள்பயன்படுத்தியதாக வெளியான வீடியோ தொடர்பாக, த.வெ.க. மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் சரத்குமார் பதவி விலக வலியுறுத்தி, தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் தென்காசி தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தென்காசி தெற்கு மாவட்டதி.மு.க.பொறுப்பாளர் வே. ஜெயபாலன் அவர்கள் தலைமை தாங்கினார். தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் அவர்கள் மற்றும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலைக்கதிரவன் அவர்கள் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தி.மு.க.வினர் அமைச்சர் சரத்குமார் பதவி விலக வலியுறுத்தியும், அவரது செயலுக்கு எதிராகவும் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் கனிமொழி, மாவட்டப் பொருளாளர் M.A.M. ஷெரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டாக்டர் மா. செல்லத்துரை, சேசுராஜன், சேக் தாவூது, ஆறுமுகச்சாமி, அவைத் தலைவர் முத்துப்பாண்டி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். முகமது ரஹீம், க. ராஜேஷ்வரன், மு. தமிழ்ச்செல்வி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மஹ்முதா, தென்காசி நகரச் செயலாளர் சாதிர், சுரண்டை நகரச் செயலாளர் A.G. கணேசன், செங்கோட்டை நகரச் செயலாளர் வெங்கடேசன், கடையநல்லூர் வடக்கு நகரச் செயலாளர் அப்பாஸ், கடையநல்லூர் நகரச் செயலாளர் பீர் அப்பா, ஒன்றியச் செயலாளர்கள் A.R.M. அழகு சுந்தரம், ஜே.கே. ரமேஷ், சீனித்துரை, எம்.பி.எம். அன்பழகன், ஜெயா ஐயப்பன், திவான் ஒலி, ரவிசங்கர்,மணிகண்டன், சுரேஷ், பேரூர் கழகச் செயலாளர்கள் குட்டி, முத்தையா, ராஜராஜன், கோபால், , சிதம்பரம், வெள்ளத்துரை , முகமது உசேன் என்கின்ற தங்கப்பா, கடையநல்லூர் நகர்மன்றத் தலைவர் டாக்டர் மூப்பன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் எட்வின், கதிர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,உள்ளாட்சிஅமைப்புகளின் பிரதிநிதிகள், வார்டு மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் என 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்றஉறுப்பினர்டாக்டர் கலைக்கதிரவன் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்ட தி.மு.க.வினரை காவல்துறையினர் கைது செய்து, காவல்துறை மற்றும் அரசு பேருந்துகள்மூலம்கீழப்புலியூரில் உள்ளதனியார்திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்று அடைத்து வைத்தனர்.

## கோவை சின்னவேடம்பட்டி பகுதியில் உள்ள கௌமார மடாலயத்தில்

# மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் சார்பாக சங்கமம் 2026 எனும் தலைப்பில் நடைபெற்ற கல்வி ஊக்கத்தொகை மற்றும் விருதுகள் வழங்கும் விழா



கடந்த 5 ஆண்டுகளாக, பல்வேறு பள்ளி மாணவ மாணவியர்களின் கல்வி திறனை ஊக்குவிக்கும் வகையில், தொடர்ந்து பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக, சங்கமம் 2026 எனும் தலைப்பில் விழிப்புணர்வு விருதுகள் வழங்கும் விழா கோவை சின்ன வேடம்பட்டி பகுதியில் உள்ள கௌமார மடாலயத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொள்ள கோவை மட்டுமின்றி திருப்பூர், சேலம், ஈரோடு, நீலகிரி, திருநெல்வேலி, உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அரசுபள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளை சார்ந்த மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். தற்போது நடைபெற்று நிறைவு பெற்ற 2025 மற்றும் 2026 கல்வியாண்டில் அரசு மற்றும்,அரசு உதவி பெறும் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்கள் எடுத்த, மாணவ மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கப்பட்டது. தொடர்ந்து உடல் உறுப்பு தானம் வழங்குதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியும், இயற்கையை பாதுகாக்கும் நோக்கத்தில் பசுமையை காப்போம் என்றதலைப்பில் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தின் நிறுவன தலைவர் டாக்டர் அமிர்தா பாலசுப்ரமணியம் தலைமை தாங்கினார். இந்த விழாவில் அமைப்பின் தலைவர் கோவை சந்திரன், பிரேமா கோகுல், செயலாளர் பீர்முகமது, பொருளாளர் கோவை கீதா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைப்பின் நிறுவன தலைவர் அமிர்தா பாலசுப்பிரமணியம் கூறியதாவது.. மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் கடந்த 2024 ஆம் ஆண்டு முறைப்படி பதிவு செய்யப்பட்ட ஒரு இயக்கமாக உள்ளது ,இது ஒரு பொதுநல இயக்கம், இன்றைய மனித இனத்திற்கு தேவையான கல்வி, உணவு, மருத்துவம், தரமாகவும், இல்லாதவர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதே, இந்த அமைப்பின் குறிக்கோள் என்று தெரிவித்தார்.மக்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் பாலமாக செயல்பட்டு, மக்களின் அன்றாட தேவைகளை பெறுவது எனவும், எங்கெல்லாம் மக்களின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றதோ, அங்கெல்லாம் மக்களின் ஒருமித்த குரலாய் ஒழித்து, மக்களை பாதுகாக்கும் ஒரு இயக்கமாக இந்த இயக்கம் இயங்கி வருகின்றது, சாதி, மதம், இனம், மொழி, அரசியல், சக்திகளுக்கு அப்பாற்பட்டு, அனைவரும் ஒன்றே என்று இணைக்கும் இயக்கமாக இந்த மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் இயங்கி வருகின்றதாக அவர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்த க்கது.

# இந்தியாவின் முதல் மற்றும் மிகப்பெரிய டைனஸ்டி லீக் டிஎன்டிபிஎல் சீசன் 1 எனும் பிக்கிள்பால் போட்டிகள்

## கோவையில் பிரம்மாண்டமாக நடைபெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன



கோவையில் உள்ள எஸ்டி ஸ்போர்ட்ஸ் இன்டோர் கோர்டில் இந்தியாவின் முதல் மற்றும் மிகப்பெரிய டைனஸ்டி லீக் தொடராகக் கருதப்படும் தமிழ்நாடு பிக்கிள் பால் டைனஸ்டி லீக் சீசன் 1, மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது.100 வீரர்கள்,10 அணித்தலைவர்கள் மற்றும் 10 அணியின் உரிமையாளர்கள் கலந்து கொண்ட இந்த தொடக்க விழா விளையாட்டு ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்த தொடரின் தலைப்பு ஆதரவாளராக இந்திய கார் பந்தய சாம்பியனும், விஎன்ஏ க்ரூப்ஸ் மற்றும் டிஐஏ டைமண்ட்ஸ் நிறுவனங்களின் உரிமையாளருமான பாலபிரசாத் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தார். விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக வழங்கி வரும் ஆதரவும் பங்களிப்பும் பாராட்டப்பட்டது. மேலும் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக திரைப்பட இயக்குநர் என். கிருஷ்ணா, உலகின் நம்பர் 1 விர்சுவல் ரியால்ட்டி டென்னிஸ் வீரர் விமல்ராஜ் ஜெயச்சந்திரன், நடிகர் மற்றும் தயாரிப்பாளர் அதவா ஈஸ்வரா, சர்வதேச பயிற்சியாளர் ராக்கி ராகவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வீரர்களை உற்சாகப்படுத்தினர் இரண்டு நாட்கள் விறுவிறுப்பாகநடைபெற்ற இந்த லீக் போட்டியில் வீரர்கள் உற்சாகமாக பங்கேற்று போட்டிகளை சிறப்பாக நிறைவு செய்தனர். இறுதிப்போட்டியில் கவுதம் தலைமையிலான மற்றும் கிஷோர், திவ்யா, சர்வேஷ் ஆகியோர் உரிமையில் இருந்த செம்மொழி எம்பயர்ஸ் அணி சாம்பியன் பட்டத்தை வென்றது. ரன்னர்-அப் பட்டத்தை சேலம் ராமகிருஷ்ணன் ரங்கராஜ் உரிமையிலான பல்லவா டைட்டன்ஸ் அணி, கேப்டன் சந்தீப் தலைமையில் கைப்பற்றியது. இந்திய பிக்கிள் பால் வரலாற்றில் முக்கியமான இடத்தைப்பெற்ற இந்த தொடர், அடுத்த சீசனில் இன்னும் பிரம்மாண்டமாக திரும்பும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



தென்காசி மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலராக பணியாற்றிய கருப்பண்ண ராஜவேல் தூத்துக்குடி மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து திரு சே. ர. நவீன் பாண்டியன் இன்று பொறுப்பேறுக் கொண்டார். இதற்கு முன்பு இவர் தூத்துக்குடி மாவட்ட செய்தி அலுவலராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத் தக்கது

# வேப்பூர், நல்லூர் பகுதிகளில் விருத்தாசலம் எம்.எல்.ஏ. பிரேமலதா விஜயகாந்த் திடீர் ஆய்வு

கடலூர் மாவட்டம் வேப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில்விருத்தாசலம் சட்டப்பேரவை உறுப்பினரும், தேமுதிக பொதுச் செயலாளருமான பிரேமலதா விஜயகாந்த் நேரில் சென்று பல்வேறு வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

நல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்ற அவர், அங்கு பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள்மற்றும்அடிப்படை வசதிகள் குறித்து நல்லூர் வட்டார மருத்துவ அலுவலர் மருத்துவர் தமிழரசனிடம் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, வேப்பூர் கூட்டுரோடு பகுதிக்குச் சென்ற அவர், அங்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மக்களின் தேவையை கருத்தில் கொண்டு, புதிய கழிப்பறை மற்றும் பயணிகள் பேருந்து நிழற்குடை அமைக்க வேண்டும் என்ற பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கைகளை நேரடியாகக் கேட்டறிந்தார். இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி விரைவான நடவடிக்கை எடுப்பதாக அவர் பொதுமக்களிடம் உறுதியளித்தார். அப்போது நல்லூர்வட்டாரவளர்ச்சி அலுவலர் கொளஞ்சி உடனிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, வேப்பூர் அரசு மருத்துவமனைக்குச் சென்ற பிரேமலதா விஜயகாந்த், அங்கு நோயாளிகளுக்கு அளிக்கப்படும் மருத்துவ வசதிகள், மருந்துகளின் இருப்பு மற்றும் மருத்துவமனையின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், உள்நோயாளிகள் பிரிவிற்குச் சென்று அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளை நேரில் சந்தித்து நலம் விசாரித்த அவர், அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரங்களை கேட்டறிந்ததோடு, நோயாளிகளுக்கு பழங்கள், ரொட்டி உள்ளிட்ட ஊட்டச்சத்து பொருட்களை வழங்கி ஆறுதல் தெரிவித்தார். மருத்துவமனைக்கு வரும் பொதுமக்களுக்கு தரமான சிகிச்சை உடனுக்குடன் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என மருத்துவர்களிடம் அவர் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, மருத்துவமனையின் தலைமை மருத்துவர் ஆர். புலிகேசி, மருத்துவர்கள் கார்த்திகேயன், ஆசித், திவ்யா, செவிலியர் ரேவதி,மருந்தாளுநர் பாலகிருஷ்ணன் உள்ளிட்ட மருத்துவக் குழுவினர் உடனிருந்தனர்.



தொடர்ந்து, சேப்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்குச் சென்று விவசாயிகளுக்கான கடன் உதவிகள் மற்றும் வங்கியின் தினசரி செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். அதன் பின்னர் சேப்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, அங்குள்ள மாணவர்களுக்கான கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் செயல்பாடுகள் குறித்தும் அவர் ஆய்வு செய்தார். இந்த ஆய்வு நிகழ்வுகளில் தேமுதிக மாவட்டக் கழகச் செயலாளர் சிவக்கொழுந்து, மாவட்ட துணைச் செயலாளர் பி. எஸ். வேல்முருகன், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ரமேஷ்,கே.பி.எஸ்.செந்தில், மாவட்ட பிரதிநிதி வீனஸ் செந்தில் ஆகியோர் முன்னிலைவகித்தனர். மேலும், நல்லூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஏ.கே.சேகர்,நல்லூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பச்சமுத்து, விருத்தாசலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் செம்பை, விருத்தாசலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் ராமச்சந்திரன், விருத்தாசலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜெயராஜ், கம்மாபுரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பொன் தனசேகர், விருத்தாசலம் நகரச் செயலாளர் ராஜ்குமார், விருத்தாசலம் நகர அவைத் தலைவர் கஸ்பா சங்கர் ஆகியோர் பங்கேற்றனர்.

இவர்களுடன் நல்லூர் மேற்கு ஒன்றிய அவைத்தலைவர் மாயவேல், நல்லூர் கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர் மாரிமுத்து, விருத்தாசலம் கிழக்குஒன்றியஅவைத்தலைவர் ராமச்சந்திரன், நல்லூர் கிழக்கு ஒன்றியப் பொருளாளர் தெய்வீகன், நல்லூர் மேற்கு ஒன்றியப் பொருளாளர் வெல்டிங் முத்து மற்றும் கட்சியின் ஒன்றிய நிர்வாகிகள் தண்டபாணி, சபீபுல்லா, சுப்பிரமணி, ஆண்ட பெருமாள் உள்ளிட்டஏராளமானதேமுதிக நிர்வாகிகள், தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

# பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 சி மாவட்டத்தின், ஆளுநர் அதிகாரப்பூர்வ வருகை எனும் நிகழ்ச்சி

## கோவை கொடிசியா அருகே உள்ள ஜே ஆர் ஹாலில் நடைபெற்றது



பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 சி மாவட்டத்தின், கோவை நேரு நகர் லயன்ஸ் சங்கம், வாரியர்ஸ் லயன்ஸ் சங்கம், அன்பு லயன்ஸ் சங்கம் ஆகிய மூன்று சங்கங்கள் இணைந்து நடத்திய ஆளுநர் அதிகாரப்பூர்வ வருகை எனும் நிகழ்ச்சி கோவை கொடிசியா அருகே உள்ள ஜே ஆர் ஹாலில் நடைபெற்றது. இந்த விழாவினை ஜிஎஸ்டி லயன் செந்தில்குமார் ஒருங்கிணைத்திருந்தார். சங்கத்தின் தலைவர்களான கிருஷ்ணமூர்த்தி, ராஜேஷ், சித்ரா பாலசுப்பிரமணியம் ஆகியோர் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில், மாவட்ட ஆளுநர் பிஎம்ஜேஎப் ஏ.ராஜசேகர் மாவட்டத்தின் முதல் பெண்மணி நந்தினி ராஜசேகர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் ஒவ்வொரு சங்கத்தின் செயல்பாடுகள்,சேவைத் திட்டங்கள், தலைமைப் பண்பு பற்றி ஆலோசனைகள் குறித்து சிறப்புரையாற்றி அவர்களின் சேவைகளை பாராட்டியதுடன், சிறந்த மாவட்ட ஆளுநர் ஏ. ராஜசேகர், சிறந்த மாவட்ட முதல் பெண்மணி நந்தினி ராஜசேகர் ஆகியோருக்கு மூன்று சங்கங்களும் இணைந்து விருதுகளை வழங்கினர்.

சிறப்பு அழைப்பாளர்களாக முதலாம் துணை ஆளுநர் தேர்வு சூரி நந்தகோபால், இரண்டாம் துணை ஆளுநர் தேர்வு, பாஸ்கர் மாவட்ட அமைச்சரவை செயலாளர்கள் ரவிசங்கர், விஸ்வேஸ்வரன், பொருளாளர் நல்லபாண்டி, எல்சிஐஎஃப் பிரிவின் தலைவர் ஜெயகாந்தன், லயன்ஸ் ஷேர் முருகேசன், மாவட்ட டைரக்டரி தலைவர் கிருஷ்ணகுமார்,மாவட்ட விருது தலைவர் அனீஸ் குமார், மண்டலத் தலைவர்கள் தேர்வு விஜயகுமார்,ராமநாதன்,மாவட்ட தலைவர் மோகன்ராஜ், எல்.பி.என் மாவட்டத் தலைவர் நந்தகுமார்,சர்வீஸ் மாவட்ட தலைவர் கதிரவன், மாவட்ட தலைவர் நேரு நகர் நந்தகுமார் சங்கத்தின் செயலாளர் தேஜஸ்வினி, ரமேஷ், வளர்மதி நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக தொகுத்து வழங்கிய வட்டார தலைவர் சுப்பு செந்தில்குமார், அகிலாண்டேஸ்வரி, ரேணுகா, மற்றும் விழாவில் கலந்து கொண்ட 20க்கும் மேற்பட்ட சங்கத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், புதிய நண்பர்கள் அனைவருக்கும் சிறப்பான ஒரு நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடி மாமன்ற கூட்டத்தில் தமிழக வெற்றிக்கழக கவுன்சிலர்கள் இருக்க இருக்கைகள் அமைத்துக் கொடுக்காததால் போராட்டம்

தூத்துக்குடி மாநகராட்சி மாமன்ற கூட்டம் இன்று மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. அப்போது தமிழக வெற்றி கழகத்தில் புதிதாக இணைந்துள்ள மாமன்ற உறுப்பினர்கள் மந்திரமூர்த்தி மற்றும் ராமர் ஆகியோர் கூட்டம் துவங்கியவுடன் தமிழக வெற்றிக்கழக அரசை தமிழகமுதல்வர்ஜோசப் விஜய்யைபாராட்டிமாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் தங்களுக்கு இருக்கைகள் முன்னாள் அமைக்கவேண்டும்என வலியுறுத்தி மேயரை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர் இதைத்தொடர்ந்து திமுக கவுன்சிலர்களும் இருக்கைகளை விட்டு எழுந்து வந்து மேயர் இருக்கை முன்பு வந்து போராட்டத்தில் ஈடுபட்ட தமிழக வெற்றிக்கழக கவுன்சிலர்களை முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் இதன் காரணமாக அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கூச்சல் குழப்பம் ஏற்பட்ட நிலையில் தள்ளுமுள்ளும் ஏற்பட்டது

இதை அடுத்து மாநகராட்சி மேயர் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழக வெற்றிக்கழக கவுன்சிலர்களை இருக்கையில் அமருங்கள் என கூறினார் ஆனால் அவர்கள் இருக்கையில் அமராமல் இருந்த நிலையில் மேயர் ஜெகன் பெரியசாமி தமிழக வெற்றிக்கழக அரசு தமிழகத்தில் தொடர்ந்து நிலவி வரும் பாலியல் வன்கொடுமைகள் மற்றும் போதை மருந்து கலாச்சாரம் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை முறையாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது மேலும் பல்வேறு பகுதிகளில் மது கடைகள் திறந்து உள்ளது இதன் காரணமாக பெண்கள் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என மேயர் தெரிவித்தார்.



இந்த நிலையில் தமிழகவெற்றிக்கழககவுன்சிலர்கள் மந்திரமூர்த்தி மற்றும் ராமர் ஆகியோர் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து தமிழக வெற்றிக் கழக கவுன்சிலர்கள் இரண்டு பேரும் வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் அவர் பேசுகையில்:

தமிழக வெற்றிக்கழக கவுன்சிலர் மந்திரமூர்த்தி கூறுகையில்: நாங்கள் கூட்டத்தில் தமிழக வெற்றி கழக அரசு வெற்றி பெற்றதை தொடர்ந்து தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பாராட்டி மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்தோம் மேலும் எங்களுக்கு முன் பகுதியில் இருக்கையில் ஒதுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தோம் ஆனால் அதற்கு உரிய நடவடிக்கைஎடுக்காமல் திமுக கவுன்சிலர்கள் தங்களை பேசவிடாமல் தடுத்து அராஜகத்தில் ஈடுபட்டனர் இதன் காரணமாக நாங்கள் வெளிநடப்பு செய்துள்ளோம் எனதெரிவித்தார்மேலும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் பிரியங்கா திமுக மாநகராட்சி நிர்வாகத்திற்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறார் அவரை உடனடியாக மாற்றம் செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# ஐரோப்பிய நாடுகளை சுட்டெரிக்கும் ‘ஒமேகா பிளாக்’ வெப்ப அலையும் தாக்கமும் எத்தகையது?

ஐரோப்பாவின் மேற்குப் பகுதி நாடுகளில் கடந்த 20 நாட்களுக்கும் மேலாக மக்களால் தாங்க முடியாத அளவுக்கு கொடுமையான வெயில் வாட்டி வருகிறது. பிரான்ஸில் மட்டும் கடந்த 10 நாட்களில் வெப்ப அலைக்கு 1,400 பேர் உயிரிழந்துவிட்டதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.



கடந்த 21-ம் தேதி பிரான்ஸ், ஸ்பெயினில் தொடங்கிய இந்தக் கொடூரமான வெப்பம் தற்போது ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, போலந்து, செக். குடியரசு, ஸ்லோவோகியா, பிரிட்டன் வரை நீண்டுள்ளது. 40 டிகிரி சென்சியஸுக்கு மேல் சுட்டெரிக்கும் வெயிலை தாங்க முடியாமல் மக்கள் தவித்து வருகிறார்கள்.

பிரான்ஸின் பல்வேறு நகரங்களை கொடும் வெயில் மக்களை வாட்டி எடுத்து வருகிறது. சில நகரங்களில் அதிகபட்சமாக 44 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் பதிவாகியுள்ளது. ஜெர்மனி, சுவிட்சர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் அதிகபட்சமாக 41 டிகிரி செல்சியல் வரை வெப்பம் நீடிப்பதால்மக்கள்பெரும் அவதிக்கு ஆளாகிறார்கள்.

ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில்இருக்கும்நாடுகள் ஆண்டின் பெரும்பகுதி காலம்,குளிர் மற்றும் உறைபனி ஆகியவற்றிலேயே இருக்கும்.கோடை காலத்தில் மட்டும் இங்கு வெயில் இருக்கும். அதுவும் உடலுக்கு இதமான வகையில்தான் வெப்பம் இருக்கும்.இதனால்,இந்த நாடுகளில் உள்ள வீடுகள், அலுவலகங்கள், ஹோட்டல்கள், பள்ளிகள், கல்லூரிகள், குளிரைத் தாங்கும் வகையில்தான் அமைக்கப்பட்டிருக்கும்.

இதைவிடக் கொடுமையாகஜெர்மனி,பிரான்சிஸ் இரவு நேரத்தில் 30 டிகிரி செல்சியஸ்வரைவெப்பம் நீடிப்பதால்,மக்கள் தூங்க முடியாமல் சிரமப்படுகிறார்கள் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. பகல்நேரத்தில்வெயில் 41 டிகிரி செல்சியஸும், இரவில் 30 டிகிரி வரையும் இருப்பதாக ஜெர்மன் வெதர் சேவை தெரிவித்துள்ளது. ஜெர்மனி, பிரான்ஸ் நாடுகளில் தார்ச் சாலைகள் வெப்பத்தால் உருகி நிற்பதும், போக்குவரத்து சிக்னல்களுக்கு பயன்படுத்தப்படும் விளக்குகள் வெப்பத்தால் வளைந்துவிட்டதும், வெயிலில் வெறும் கடாயில் ஆம்லேட் சமைக்கும் காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகி வரு கின்றன. ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் தமிழர்கள், அங்கு நிலவும் கடும் வெப்பத்தையும், தாங்க முடியாத வெப்ப அலை குறித்தும் இன்ஸ்டாகிராம், ட்விட்டர்களில் பல வீடியோக்களையும், ரீல்ஸ்களையும் பதிவிட்டுள்ளனர்.

தாங்க முடியாத வெயிலுக்கு என்ன காரணம்?

ஐரோப்பாவைச் சேர்ந்த வேர்ல்ட் வெதர் அட்ரிபியூஷன் அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகள் விடுத்த எச்சரிக்கையில் "ஐரோப்பாவில் இதுவரை வரலாற்றில் இல்லாத வகையில் வெப்பஅலை மக்களை வாட்டி வதைக்கிறது. வெப்பத்தோடு சேர்த்து, காற்று இல்லாமல் ஈரப்பதம் மட்டும் சேர்ந்துள்ளதால், மக்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இந்த அளவு காலநிலை மோசமானதற்கு மனிதத் தவறால்உருவானகாலநிலை மாறுபாடுதான் காரணம்.

# பெண்களிடம் இந்நாட்டை புரட்டி போடும் நெம்புகோல் உள்ளது

## சிங்கபெண் சிறப்பு பிரிவு, காவல் உதவி ஆய்வாளர் அனிதா பெருமிதம்

பெண்களின் வாழ்க்கைவட்டம்மிகவும் குறுகியது அவர்களை இச்சமூகத்தில் சாதனை பெண்களாக மாற்ற இன்னும் போராடி கொண்டே தான் இருக்கிறார்கள், போராட்ட களத்திற்கு வந்ததே முதல் வெற்றியாக நான் பார்க்கிறேன் கோவையில் பெண்கள் மத்தியில் சிறப்புரையா ற்றிய சிங்கபெண் சிறப்பு பிரிவு, காவல் உதவி ஆய்வாளர் அனிதா பெருமிதம்.

நீதியரசர் கற்பக விநாயகம் வழிகாட்டுதலின் படி, மாதாமாதம் பல்வேறு சமூக சேவை பணிகளை, அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் சார்பாக நடத்தி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக பெண்களுக்கான சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

கோவை வ உ சி பூங்கா அருகே, உள்ள தி கேரளா க்ளப் அரங்கில், நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்களை ஒருங்கிணைந்து விழாவினை சிறப்பித்த பிரபு, பிரபு விஜயலட்சுமி ஆகியோர் விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். அமைப்பின் மாநில வழக்கறிஞர் பிரிவு தலைவர் வழக்கறிஞர் சுந்தரவடிவேலு, வழக்கறிஞர் தேன்மொழி, கற்பகம் அகாடமி சார்பாக டாக்டர் கதிரவன்,மற்றும் சிங்கப்பெண் சிறப்பு பிரிவு காவல் துணை ஆய்வாளர் அனிதா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

விழாவுக்கான வரவேற்புரையை அமைப்பின் நிறுவன தலைவர் ஆர். கே. குமார் வழங்கினார். தொடர்ந்து இச்சமூகத்தில் பெண்களுக்கு இழைக்க படும் அநீதி, குறித்தும் பெண்கள் இன்னும் விழிப்படையாத நிலை குறித்தும்,




சட்ட நிலை குறித்தும் தங்களதுகருத்துகளை முன் மொழிந்தனர். தொடர்ந்து பெண்களின் பாதுகாப்பு குறித்து சிங்கப்பெண் உதவி ஆய்வாளர் அனிதா அனைவரது மத்தியிலும் எடுத்துரைத்தார்.அப்பொழுது அவர் கூறியதாவது.

பெண்களிடம் இந்நாட்டைபுரட்டிபோடும் நெம்புகோல் உள்ளது. அவை பெண்களின் தன்னம்பிக்கை, சுய தைரியம், சமூக மரியாதை,உள்ளிட்டபல்வேறு பொருப்புகளை சுமந்தபடி பெண் இச்சமூகத்தில் பயணிக்கிறாள் பெண்களின் வாழ்க்கை வட்டம் மிகவும் குறுகியது. அதில் வென்று சாதனை பெண்களாக இன்று நாடுமுழுவதும் பல பெண்கள் முன்வந்து கண்டிருக்கிறார்கள், போராட்ட களத்திற்கு வருவதே முதல் வெற்றியாக நாண் கருதுகின்றேன் என்று சூழுரைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமைப்பின் அகில இந்திய பொது செயலாளர் வி. ஹெச். சுப்பிரமணியம், அமைப்பின் வழக்கறிஞர் பிரிவு மூத்த வழக்கறிஞர் சுந்தரபாலன், அமைப்பின் துணைத்தலைவர் கிருஷ்ண சாமி, அமைப்பின் மாநில மகளீரணி தலைவி லதா அர்ஜூனன், மாநில தலைவர் ராஜேஷ் குமார், டாக்டர் கதிரவன், வழக்கறிஞர் தேன்மொழி, சீடாமணி, கந்தவேல், திருப்பூர் ராமசாமி, மாவட்ட தலைவர் ராதாகிருஷ்ணன், மாவட்ட தலைவி எல்ஐசி சாந்தி, மாவட்ட தலைவர் பாலசுப்பிரமணியன், இசை கலைமாமணி சாந்தினி, மாவட்ட செயலாளர் விஜயராவ், தலைவர் ஐஸ்வர்யா, உள்ளிட்டபலர்கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியில் இளம்புவனம் கிராமத்தைச் சேர்ந்த மாற்று கட்சியினர் காங்கிரஸ் கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர் மாற்றுக் கட்சியை வழி நடத்தி காங்கிரஸ் கட்சியில் இளைஞர்களை இணைத்த இளம்புவனம் சின்னதுரைக்கு வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் பெருமாள்சாமி கதிர்வேல் வரவேற்று நன்றிதெரிவித்தார்.நிகழ்ச்சிக்கானஏற்பாடுகளைபுதியம்புத்தூர்வட்டாரத்தலைவர்ஜேம்ஸ்மற்றும்ஹரிசெய்திருந்தனர்.

# ஆசிரியர் தகுதித் தேர்வின் தேர்ச்சி மதிப்பெண்ணை குறைக்க அரசுக்கு அன்புமணி கோரிக்கை



சென்னை: தேர்ச்சிக்கான மதிப்பெண்ணை குறைப்பதன் மூலம் சிறப்புத் தகுதித் தேர்வில் பங்கேற்கும் ஆசிரியர்கள் அனைவரும் பணியில் தொடருவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ்நாட்டில் 2011ம் ஆண்டுக்கு முன் பணியில் சேர்ந்த இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தகுதித் தேர்வு ஜூலை 4, 5 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. பணியில் உள்ள ஆசிரியர்கள் தகுதித் தேர்வில்எளிதாகவெற்றி பெறுவதற்காகபலமாநிலங்களில் சிறப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் அத்தகைய திட்டங்களை அறிவிக்காதது ஆசிரியர்களுக்கு ஏமாற்றமளித்துள்ளது.

கல்வி உரிமைச் சட்டம் கடந்த 2011ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, இடைநிலை ஆசிரியர்,பட்டதாரி ஆசிரியர் பணிகளுக்கு தகுதித் தேர்வு நடத்தப்பட்டு, அதில்வெற்றிபெற்றவர்கள் மட்டுமே பிற விதிகளை பின்பற்றி நியமிக்கப்படுகின்றனர். 2011ம் ஆண்டுக்கு முன் பணியில் சேர்ந்தவர்களுக்கு தகுதித் தேர்வு கட்டாயமில்லை என்ற நிலை தான் இருந்தது. ஆனால், அவர்களுக்கு தகுதித் தேர்வைக் கட்டாயமாக்க வேண்டும் என்று கோரி தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், 2011ம் ஆண்டுக்கு முன் பணியில் சேர்ந்த ஆசிரியர்களும் 2028ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கு முன் தகுதித் தேர்வில்வெற்றிபெறவேண்டும் என கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதி தீர்ப்பளித்தது.

பணியில் உள்ள ஆசிரியர்களும் தகுதித் தேர்வில்வெற்றிபெறவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய உடனேயே, ஆசிரியர்களுக்காக சிறப்புத் தகுதித் தேர்வை மிகவும் எளிமையான முறையில் நடத்தியும், தேர்ச்சி மதிப்பெண்களைக் குறைத்தும் அனைத்து ஆசிரியர்களையும் தேர்ச்சி பெறச் செய்ய வேண்டும் என்று பாமக ஆலோசனை வழங்கியது.

ஆனால், அதை அப்போது ஏற்காத திமுக அரசு, மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவது, உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனுக்களை தாக்கல் செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளில் காலத்தை வீணடித்தது. திமுக அரசின் முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், கடந்த பிப்ரவரி மாதம் சிறப்புத் தகுதித் தேர்வை அறிவித்தது. அது தான் ஜூலை 4,5ம் தேதிகளில் நடைபெறுகிறது.

2011ம் ஆண்டுக்கு முன்பாக பணியில் சேர்ந்த ஆசிரியர்கள் பயின்ற போது இருந்த பாடத் திட்டமும், இப்போது உள்ள பாடத் திட்டமும் முற்றிலுமாக மாறுபட்டது என்பதால், அந்த ஆசிரியர்களால் தகுதித் தேர்வு எழுதி தேர்ச்சி பெறுவது மிகவும் கடினம் ஆகும். அதனால் அவர்களுக்கு தேர்ச்சி மதிப்பெண்களில் சலுகை வழங்க வேண்டும் என்பது தான் நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்களின் கோரிக்கையாக உள்ளது. ஆனால், சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் அத்தகைய சிறப்பு சலுகைகள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு வரை ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெறுவதற்கு பொதுப் பிரிவினர் 60 % (150-க்கு 90) மதிப்பெண்களும், இட ஒதுக்கீட்டுப் பிரிவினர் 55 % (150-க்கு 82) மதிப்பெண்களும் பெற வேண்டும்என்றுஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. கடந்த ஜனவரி 28ம் தேதி பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி இட ஒதுக்கீட்டுப் பிரிவினரில் பட்டியலினத்தவர், பழங்குடியினருக்கான தேர்ச்சி மதிப்பெண் 40 % ஆகவும்,பிற்படுத்தப்பட்ட பிரிவினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கான தேர்ச்சி மதிப்பெண் 50 % ஆகவும் உயர்த்தப்பட்டது. இட ஒதுக்கீட்டுப் பிரிவினர் அனைவருக்கும் ஒரே மாதிரியாக தேர்ச்சி மதிப்பெண்கள் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதை இரு பிரிவுகளாக பிரித்தது நியாயமல்ல.

# “அதிமுகவுக்குள் நிலவும் உட்கட்சி முரண்களை வெளிக் கொண்டு வர வேண்டும்” விசிக தலைவர் திருமாவளவன் பேச்சு



சென்னை: "6 எம்எல்ஏக்கள் இதுவரை பதவி விலகி இருக்கிறார்கள் என்றால், இது அதிமுகவுக்குள் நிலவும் மிக முக்கியமானபிரச்சினை. அதிமுகவுக்குள் நிலவும் உட்கட்சி முரண்கள் என்ன என்பதையே வெளிச்சத்துக்கு கொண்டு வர வேண்டும்." எனவிசிகதலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய திருமாவளவன், "தவெக அரசுக்கு ஆதரவு நல்கும் அத்தனை கட்சிகளும் வாக்கு மாற வாய்ப்பு இல்லை. விசிக, இடதுசாரிகள், ஐயுஎம்எல் ஆகிய கட்சிகள் தவெகவுக்கு அளித்த வாக்குறுதிகளை கட்டாயம் காப்பாற்றும். எல்லா கட்சிகளுக்கும் முன்னதாக காங்கிரஸ் கட்சி ஆதரவு மட்டும் கொடுக்காமல், கூட்டணியிலும் இணைகிறோம் என்று அறிவித்து உறவை உறுதிப்படுத்தினார்கள்.

5 ஆண்டுகள் வரை இந்த ஆட்சி தொடர வேண்டும் என்பதே தங்களின் விருப்பம் என இடதுசாரிகள் மீண்டும் சொல்லி வருகின்றனர். அதே நிலைப்பாட்டை விசிகவும் கொண்டுள்ளது.எனவே இந்த ஆட்சி 5 ஆண்டுகளுக்கு எந்த இடையூறும் இல்லாமல் இயங்கும் என நான் நம்புகிறேன்.

தவெக சார்பில் கூட்டணி கட்சிகள் கூட்டத்துக்கு எங்களை அழைத்துள்ளனர். அந்தக் கூட்டத்தில் எங்கள் கட்சியின் எம்.பிக்கள், எம்எல்ஏக்கள், கட்சியின் பொதுச்செயலாளர் ஆகியோர் பங்கேற்கிறோம். அதிமுக எம்எல்ஏக்கள் ஏன் ராஜினாமா செய்கிறார்கள், என அவர்களிடம் தான் கேட்க வேண்டும். ஆனால், யூகங்களின் அடிப்படையில் இங்கு விவாதங்கள் நடக்கின்றன. அதிமுகவுக்குள் என்ன பிரச்சினை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்எல்ஏக்கள் பதவி விலகும் நிலை ஏற்பட்டுள்ளது என்றால், அதிமுகவுக்குள் நிலவும் உட்கட்சி முரண்கள் என்ன என்பதையே வெளிச்சத்துக்கு கொண்டு வர வேண்டும். அவ்வாறு இல்லாமல், யூகங்களின் அடிப்படையில் விவாதங்களின் திசைவழிப்போக்கையே மாற்றும் வேலையையே செய்துகொண்டிருக்கிறார்.

6 எம்எல்ஏக்கள் இதுவரை பதவி விலகி இருக்கிறார்கள் என்றால், இது அதிமுகவுக்குள் நிலவும் மிக முக்கியமான பிரச்சினை. இதனை தீவிரமாக விவாதிக்க வேண்டும். இதுகுறித்து அதிமுகவினரிடம்தான் கேட்க வேண்டும்." எனத் தெரிவித்துள்ளார்.

# புதிய ராணுவத் தளபதியாக ஜெனரல் தீரஜ் சேத் பொறுப்பேற்பு



புதுடெல்லி: நாட்டின் புதிய ராணுவத் தளபதியாக ஜெனரல் தீரஜ் சேத் பொறுப்பேற்றார்.

ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவிவேதி இன்று ஓய்வு பெற்றதை அடுத்து, நாட்டின் 31-வது ராணுவ தளபதியாக ஜெனரல் தீரஜ் சேத் பொறுப்பேற்றார்.

ராணுவத்தில் சுமார் 40 ஆண்டு காலமாக பணியில் இருக்கும் தீரஜ் சேத், பல பிரிவுகளில் உயர் அதிகாரியாக பணியாற்றியவர். இவர் கடந்த 1986-ம் ஆண்டு ராணுவத்தின் பீரங்கி படைப் பிரிவில் அதிகாரியாக சேர்ந்தார். காஷ்மீரில் தீவிரவாத ஒழிப்பு பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

லெப்டினன்ட் ஜெனராலாக பதவி உயர்வு பெற்ற பின் இவர்,ராணுவத்தின் வான் பாதுகாப்பு பிரிவான சுதர்ஸன சக்கர படைப்பிரிவுக்கு தலைமை தாங்கினார். தென் மேற்கு மற்றும் தென் மண்டலங்களிலும் இவர் தலைமை அதிகாரியாக பணியாற்றியுள்ளார். அங்கோலா நாட்டில் ஐ.நா படை அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். பிரான்ஸின் பாரீஸில் இவர் ராணுவ உயர் அதிகாரி பயிற்சியில் பங்கேற்றுள்ளார். முன்னதாக, ஜெனரல் உபேந்திர திவிவேதி விடைபெறும் விழாவின் ஒரு பகுதியாக புதுடெல்லியில் உள்ள தேசிய போர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இன்று நான் இந்த பொறுப்பை ஜெனரல் தீரஜ் சேத்திடம் ஒப்படைக்கிறேன். அவர் ஓர் அனுபவம் வாய்ந்த வீரர், திறமையான நிர்வாகி. இந்த பொறுப்பை ஒப்படைக்கும் வேயையில், இந்திய ராணுவத்தின் எதிர்காலம் குறித்து நான் முழு நம்பிக்கை கொண்டுள்ளேன். நமது ராணுவம் தனது மரபுகளில் உறுதியாக நிலைத்திருக்கும். தற்போதைய சவால்களை எதிர்கொள்வதில் விழிப்புடன் இருக்கும். மேலும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு சூழ்நிலைக்கும் தொடர்ந்து தயாராக இருக்கும்" என தெரிவித்தார்.

# வடகிழக்கு மாநிலங்களில் கனமழை, வெள்ளம்: அசாமில் பஸ், ரயில் சேவை முடங்கியது 22,000 பேர் பரிதவிப்பு

குவாஹாட்டி: வடகிழக்கு மாநிலங்களில் பெய்யும் கனமழையால் பெரு வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. அசாமில் மாவட்டங்களில் 22,000-க்கும் மேற்பட்டோர் வீடு, உடைமைகளை இழந்து பரிதவித்து வருகின்றனர். 1,690 ஹெக்டேரில்



சுமார் 22,000-க்கும் மேற்பட்டோர் வீடு, உடைமைகளை இழந்து பரிதவித்து வருகின்றனர். ஏராளமான ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

வடமாநிலங்களில் பருவமழை தீவிரமடைந்து வருகிறது. குறிப்பாக அசாம், அருணாச்சல பிரதேசம், சிக்கிம், மேகாலயா உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் கடந்த ஒரு வாரமாக கன மழை பெய்து வருகிறது. அசாமின் தேமாஜி, நல்பாரி, திப்ருகர், சிரங், லக்கிம்பூர், கோக்ராஜார் மாவட்டங்களில் பெரு வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. இந்த பயிரிடப்பட்டு இருந்த பயிர்கள் சேதமடைந்து உள்ளன.

அசாமின் அர்ச்சிபதார் மற்றும் சிமென் சப்பாரி ரயில் நிலையங்களுக்கு இடையே உள்ள ஆற்றுப் பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உள்ளது. இதனால் அங்கு ரயில் போக்குவரத்து முழுமையாக ரத்து செய்யப் பட்டு உள்ளது. மேலும் கனமழை,வெள்ளத்தால் வடகிழக்கில் பல் வேறு ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டு உள்ளன.அசாம்வெள்ள பாதிப்பு குறித்து அந்த மாநிலமுதல்வர்ஹிமந்த பிஸ்வா சர்மாவும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் நேற்று தொலைபேசியில் முக்கிய ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா சமூக வலை தளத்தில் வெளியிட்ட பதிவில், "கன மழையால் அசாமின் தேமாஜி மாவட்டம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளது. இது தொடர்பாக மத்திய அமைச்சர் அமித் ஷா தொலைபேசியில் என்னோடு ஆலோசனை நடத்தினார். அசாமுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க அவர் உறுதி அளித்தார்" என்றார்.

அருணாச்சல பிரதேசம், மேகாலயா, சிக்கிம் உள்ளிட்ட மாநிலங்களில் கன மழையால் நிலச் சரிவுகள் ஏற்பட்டு சாலை போக்குவரத்து முடங்கி உள்ளது. அருணாச்சல பிரதேசத்தின் கெயி பயனார் பகுதியில் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தில் 4 பேர் அடித்துச் செல்லப்பட்டனர்.அவர்களைதேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. வெள்ள பாதிப்பால் அங்கு சிக்கித் தவித்த 30 சுற்றுலாப் பயணிகள் ஹெலிகாப்டர் மூலம் பத்திரமாக மீட்கப்பட்டனர். அடுத்த சில நாட்களுக்கு வடகிழக்கு மாநிலங்களில் கனமழைபெய்யும்என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன் காரணமாக தேசிய பேரிடர் மீட்புப் படை வீரர்கள், அந்தந்த மாநிலங்களின் பேரிடர் மீட்புப் படை வீரர்கள் வெள்ள பாதிப்பு பகுதிகளுக்கு அனுப்பப் பட்டு உள்ளனர்.

# Supreme Court to rule on Trump bid to limit birthright citizenship: Key thing to know

*The U.S. Supreme Court is due to rule on Tuesday on whether to let President Donald Trump restrict birthright citizenship in the United States - one of the top priorities in his crackdown on immigration - in a case involving a right that had long been woven into the fabric of American society.*

*A lower court blocked Trump's executive order directing U.S. agencies not to recognize the citizenship of children born in the United States if neither parent is an American citizen or legal permanent resident, also called a "green card" holder.*

*Tuesday is the final day of rulings for the court's current term, which began in October.*

*Challengers to Trump's order argued that it violates language in the U.S. Constitution's 14th Amendment that confers citizenship to those born in the United States who are "subject to the jurisdiction thereof."*



*Trump, who has repeatedly tested the limits of presidential power in domestic and foreign policy, issued the order last year on his first day back in office as part of a suite of policies to crack down on legal and illegal immigration. Critics have accused the Republican president of racial and religious discrimination in his approach to immigration.*

*The Supreme Court weighs in on what it means to be an American citizen just ahead of the July 4 holiday when the United States marks the 250th anniversary of its founding.*

*Ahead of the ruling, some experts had estimated that Trump's directive could affect the legal status of as many as 250,000 babies born each year and could require the families of millions more to prove the citizenship status of their newborns.*

*A CLASS-ACTION SUIT*

*The legal challenge to Trump's directive considered by the Supreme Court, which has a 6-3 conservative majority, involved a class-action lawsuit filed in New Hampshire by parents and children whose citizenship was threatened by the directive.*

*The 14th Amendment has long been interpreted as guaranteeing citizenship for babies born in the United States, with only narrow exceptions such as the children of foreign diplomats or members of an enemy occupying force.*

*The provision at issue, known as the Citizenship Clause, states: "All persons born or naturalized in the United States, and subject to the jurisdiction thereof, are citizens of the United States and of the state wherein they reside."*

*The administration has asserted that the phrase "subject to the jurisdiction thereof" means that being born in the United States is not enough for citizenship, and excludes the babies of immigrants who are in the country illegally or whose presence is lawful but temporary, such as university students or those on work visas.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.